# சுந்தரர் தேவாரத்தில் திரிபுரம் எரித்த தொன்மமும் தத்துவமும்

# Mythology and Philosophy Burned by Tripuram in Sundarar's *Devaram*

***பா. விஜயா***
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை, இந்தியா

**P. Vijaya**
*Part-Time Research Scholar*
*Madurai Kamaraj University*
*Madurai, India*

***முனைவர் சு. சந்திரா***
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி
மதுரை, இந்தியா

**Dr. S. Chandra**
*Associate Professor and Head*
*PG and Research Department of Tamil*
*Sri Meenakshi Government Arts College for Women*, *Madurai, India*

## ஆய்வுச் சுருக்கம்

*தொன்மம் என்பது இயற்கை பற்றிய மனித எண்ண வரலாறாகும். அவ்வரலாற்றின் வளர்ச்சியில் சமயங்களின் கூறாக அமையும் தொன்மங்கள் அவ்வச்சமயங்களின் தத்துவப் பொருண்மைகளின் விளக்கமாகவும் மிளிர்கின்றன. அவ்வகையில் திரிபுரம் எரித்த தொன்மம் சுந்தரர் தேவாரத்தில் இடம் பெறும் முறைமையையும் அத்தொன்மம் அடையாளப்படுத்தும் சைவசமயத்தின் தத்துவத்தையும் இவ்வாய்வுரை ஆராய்கிறது.*

## Abstract

*Mythology is the history of human thought about nature. In the development of that history, the myths that are part of the religions shine as an explanation of the philosophical ideals of those religions. In this way, this article examines the way in which the Tripuram burnt mythology is placed in the Sundarar's Devaram and the philosophy of Saivism symbolized by the mythology.*

***Keywords:***

*Saivism, Thonmam, Devaram, Kalithogai, Purananuru, Paribadal, Thirumurugatrupadai*

**Citation**

Vijaya, P. and S. Chandra. "Mythology and Philosophy burned by Tripuram in Sundarar's *Devaram*." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 44–49.

**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20095185*

**பழந்தமிழில் திரிபுரம் எரித்த தொன்மம்**

*திரிபுரம் எரித்த தொன்மம் பழந்தமிழ் இலக்கியங்களில் பயின்று வரும் ஒன்றாகும். புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பரிபாடல், கலித்தொகை உள்ளிட்ட சங்கநூல்களிலும் கலித்தொகை, பதிற்றுப்பத்து முதலிய நூல்களில் கடவுள் வாழ்த்திலும் திரிபுரம் எரித்த தொன்மம் சுட்டப்படுகிறது.*

***"மூவெயில் உடற்றிப் பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த அண்ணல்" (புறம்:55(1-4))***
***"மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்" (திருமருகாற்றுப்படை 154)***
***"பொன்றார் எயில்எரி ஊட்டிய வில்லன்" (பதிற்றுப்பத்து கடவுள் வாழ்த்து 2-3)***
***எனச் சுருக்கமாகச் சுட்டப்படுகிறது.***

*கலித்தொகையிலும் பரிபாடலிலும் இத்தொன்மம் கதைக்கூறு அமைய விரிவாகக் குறிப்பிடப்படுகிறது. முழு முதல்வனாகிய சிவபெருமான் கோபம் கொண்டு முப்புரங்களை எரித்தது போல - பிளந்தது போல எனக் கலித்தொகை பாடல்கள் உவமையாகத் திரிபுரம் எரித்த தொன்மத்தைக் குறிப்பிடுகின்றன. (கலித்தொகை, 2:4-7, 150:1-3)*

*சிவபெருமான் ஏறிய தேரை பிரமன் ஓட்டினார்' வேதங்கள் குதிரையாகின, வாசுகி பாம்பு நாண் ஆகியது, மந்திரமலை வில்லாகியது. இவற்றின் துணையோடு முப்புரங்களையும் ஒரே அம்பினால் சிவபெருமான் எரித்தார் என்பதனைப் பரிபாடல்,*

***"ஆதி அந்தணன் அறிந்து பரிகொளுவ***
***வேத மாபூண் வையத்தேர் ஊர்ந்து***
***நாக நாணா மலைவில் லாக***
***மூவகை ஆரெயில் ஓரழல் அம்பின்முறிய***
***மாதிரம் அழல்எய்து" (பரிபாடல்,5:22-26)***

*என விளக்கமாக எடுத்துரைக்கிறது. இவ்வாறு செவ்வியல் தமிழ் இலக்கியங்களில் சுட்டப்படும் திரிபுரம் எரித்த தொன்மம் பலவித வேறுபாடுகளுடன் அமைகிறது.*

**சிவபுராணத்தில்.....**

*சிவபுராணத்தில் தாரகனுடைய குமாரர்களான வித்யுன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் ஆகிய மூவரும் தந்தையின் மரணத்துக்குப் பிறகு தேவர்களைப் பழி வாங்க வேண்டுமென்று பிரம்மதேவனைக் குறித்துத் தவம் மேற்கொண்டனர், வரம் பெற்றனர்.*

*அசுரர்கள் மூவரும் நினைத்த மாத்திரத்தில் பறந்து செல்லும் திரிபுரங்களை யடைந்து தேவர்களுக்கும் பூலோகவாசிகட்கும் கொடுமைகள் இழைத்து வந்தனர்.*

*ஆயிரம் வருடங்களுக்கொருமுறை முப்புரங்களும் ஒன்று சேரும் போது ஒரே பாணத்தால் அவற்றை அழிக்கக் கூடிய சக்தி வாய்ந்தவனே தங்களை அழிக்க வல்லவன் என அவர்கள் வரம் பெற்றுள்ளார்கள்.*

*சிவபெருமானைத் தேவர்கள் வேண்டினர், அவர் இசைந்தார். அசுரர்களை வதம் செய்வதற்காக ஈசன் ஏறிச் செல்லும் இரதமாகத் தேவர்கள் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டனர்.*

*சூரியர், சந்திரர் இருவரும் சக்கரங்களானார்கள். அஸ்த கிரியும், உதய கிரியும் இருசுகளாயின. மந்தரகிரியே இரதமாகியது. ஆகாயம் கொடுமுடி ஆகியது. தேவர்கள் இரதத்தின் அலங்காரப் பொருள்களானார்கள், விந்தியமலை குடையாகியது. பிரம்மதேவன் கடிவாளத்தைக் கையிலேந்திச் சாரதியானார். பிரவணம் குதிரைகளை ஓட்டிச்செல்லும் சாட்டையாக மாறியது. வேதங்கள் நான்கும் குதிரைகளாயின. மேருமலை வில்லாக*

*வாசுகி அதன் நாண் கயிறாகியது. சரசுவதி வில்லின் நுனியிலே கலகல என வொலிக்கும் சிறுமணிகளாக விளங்கினாள். விஷ்ணு பாணமானார்.*

*பட்டணத்தை நெருங்கியதும் ஈசன் வில்லை வளைத்து ஊங்காரம் செய்தார். திரிபுரங்கள் ஒன்றாயின. நெற்றிக் கண்ணைத் திறந்தார். தீ முப்புரங்களையும் எரியச் செய்தது. வில்லை வளைத்துப் பாணத்தை எய்தார். முப்புரங்களும் அடியோடு நாசமாயின என்பது தொன்மம்.*

**திரிபுரம் எரித்த தொன்மம்**

*பூமி, அந்தரம், சுவர்க்கம் என்று சொல்லப்படும் மூன்று உலகங்களிலும் பொன், வெள்ளி, இரும்பு இவற்றாலாகிய மூன்று கோட்டைகளை உடைய அசுரர்கள் திரிபுரத்தவர் என்னும் பெயருடன் விளங்கினர். அவர்கள் சிவபக்தி, அடியார் பத்திகளிற் சிறந்து விளங்குவதோடு சிவபூசையிலும் சிறந்து விளங்கினார்கள். அவர்களுடைய திரிபுரங்களில் வாழ்வோரும் சிவபக்தியுடையவர்களாயும் சிவநாமத்தை ஒலிப்பவர்களாயும் இருந்தனர். ஆயினும் அசுரர் குலத்தைச் சேர்ந்தவர்களாதலால் தேவர்களை வருத்தினர். பிரமன் முதலிய தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். திருமால் அத்தேவர்களுடன் ஒரு வேள்வியியற்றி அதினின்றும் பல பூதங்களை உண்டாக்கித் திரிபுரத்தவர் மேல் ஏவினார். அவை திரிபுரங்களை அணுக மாட்டாதனவாய் அழிந்தன.*

*பின்னர் திருமால் அவ்வசுரர்கள் சிவபெருமானைச் சார்ந்தவர்களாய் இருந்ததால் நம்மால் அவர்களை அழிக்க இயலாது. சிவபெருமானே அழிக்க வல்லவர். ஆதலால் நாம் அவ்வசுரர்கள் கொண்டுள்ள, சிவபத்தியைச் சிதைப்போம் என்று கூறி, "வேதநெறி குற்றமுடையதென்றும், மறுமையென்று ஒன்று இல்லையென்றும் எல்லாப் பொருளும் கணந்தோறும் தோன்றியழியும் என்றும் கூறும் நூல் ஒன்று செய்து, தனது அம்சத்தில் ஆதிபுத்தன் என்னும் ஒரு புருடனைப் படைத்து, நீ நாரத முனிவருடன் சென்று திரிபுரத்தவர்களுக்கு இந்நூலைப் போதித்து மயக்கி அவர்களைச் சிவநெறியினின்றும் நீக்குக" என்று அனுப்பினார்.*

*நாரதரும், ஆதிபுத்தனும் திரிபுரத்தவர்களை அடைந்து மயக்கித் தமது மாணாக்கராகச் செய்து புத்தமதத்தைப் போதித்தனர். அவர்களும் சிவநெறியினின்றும் நீங்கினர். இதையறிந்த திருமால் மகிழ்ச்சியுற்றுத் தேவர்களோடு திருக்கயிலையை அடைந்து திரிபுரத்தவர்களால் தாம் பட்ட துன்பத்தையும், அவர்களைச் சிவநெறியினின்றும் மாறச் செய்ததையும் கூறி அவர்களை அழிக்கும்படி வேண்டினார்.*

*சிவபெருமான் போர்க்குரிய கருவி யாதும் இல்லையே என, பூமி தேர்த்தட்டாகவும், சூரிய, சந்திரர் சக்கரங்களாகவும், வேதங்கள் குதிரைகளாகவும், பிரம்மன் சாரதியாகவும், மேருமலை வில்லாகவும், வாசுகி நாணாகவும், திருமால் அம்பாகவும், மற்றையத் தேவர்கள் மற்றைய கருவிகளாகவும் அமைந்து நின்றனர். சிவபெருமான் அத்தேர்மீதேறி, அவ்வில்லை வளைத்து நாணேற்றிக் கணைபூட்டித் திரிபுரத்தவர்களை நோக்கி ஓர் புன்னகை புரிந்த காலையில் திரிபுரங்களும் வெந்து நீறாயின என்பது மற்றொரு தொன்ம விளக்கமாகும். (சபேசன்.வி, புராண வரலாற்றுக் குறிப்புக்கள், ஏழாந்திருமுறை ப.140)*

**மறைமலையடிகளின்கருத்து**

*இந்தத் திரிபுரம் எரித்த தொன்மத்தை மறைமலையடிகள் பிறிதொரு விதமாகக் குறிப்பிடுகிறார்.*

*“இனி ஏற்றார் மூதூர் எழினகை தளரியின் வீழ்வித்த வரலாறு வடமொழி மகாபாரதத்தின் அநுசா சந பர்வத்திற் சொல்லப்பட்டிருத்தலின் அதனை இங்கே மொழிபெயர்த்துக் தருகின்றோம்.*

*இரும்பாலும் வெள்ளியாலும் பொன்னாலும் ஆக்கப் பட்ட மூன்று நகரங்கள் மறஞ்சிறந்த அசுரர்களுக்கு வானின் கண்ணே இருந்தன. பகவானாகிய இந்திரன் தன்னிடத்துள்ள படைக்கலங்கள் எவற்றாலும் அவைதம்மை அழிக்கக்கூடவில்லை. அதனாற், பெரியரான ஒருங்குகூடி “உருத்திரரே, எல்லா வேள்விகளிலும் தேவரீர்க்கு உகந்த பசுக்கள் உளவாகுக. பெருமையைத் தருவோரே, அரக்கர்களை மீட்டருளும்” என்று வழுத்தினார்கள். அவ்வாறு வழுத்தப்பட்ட அவர் “அங்ஙனமே ஆகுக” என்று கூறித் திருமாலை அம்பாகவும், தீக்கடவுளை அதன் பல்லாகவும், வைவசுதன் புதல்வனான யமனை அதன் இறகாகவும், எல்லா வேதங்களையும் வில்லாகவும், சிறந்த சாவித்திரியை நாணாகவும் அமைத்து, நான்முகனைத் தன் தேர்ப்பாகனாக இருத்தி, ஞாயிற்றின் திறத்தையுடையனவும், உலகை எரிக்கும் நெருப்பையொத்த கொடுமை வாய்ந்தனவும் ஆன மூன்றாய்ப் பிணைக்கப்பட பல்லம்புகள் மூன்றினால் இசைந்த காலத்தே அம்மூன்று நகர்களையும் எய்தனர். அவ்வசுரர்கள் தம்முடைய நகரங்களோடும் உருத்திரரால் எரிக்கப்பட்டனர்” என விவரிக்கிறார். (மறைமலையடிகள், திருவாசக விரிவுரை ப.276)*

**தொன்மக் கூறுகளில் வேறுபாடு**

*திரிபுரம் எரித்த தொன்மம் பல வேறுபாடுகளுடன் விளங்குவதனை அறிய முடிகிறது. முப்புரத்தரக்கர்தம் கொடுமை தாங்க இயலாமல் சிவபெருமானிடம் தேவர்கள் முறையிட அவர் முப்புரமெரித்தார் என்ற மையச் செய்தியில் எந்த மாற்றமும் இல்லை.*

*திரிபுரத்தை எரிக்கப் புறப்படுங்கால் தேர், போர்க்கருவிகளாக எவரெவர் ஆனார்கள் என்பதிலும் ஓரளவு ஒற்றுமை உள்ளது எனலாம்.*

*ஏழாம்திருமுறை குறிப்பினும் சிவபுராணத்திலும் திரிபுரம் எரித்த தொன்மம் பெரும்பான்மையும் ஒற்றுமைக் கூறுகளுடன் அமைகிறது. மறைமலையடிகள் கூறும் தொன்மம் வேறுபடுகிறது. வேதங்கள் வில்லாயின என்றும் சாவித்திரி நாணாகியது எனவும் தீக்கடவுள் அம்பின் பல்லாகவும், எமன் அம்பின் இறகாகவும் ஆனது. இதுவே மறைமலையடிகள் காட்டும் வேறுபாடு ஆகும். இந்த வேறுபாடுகளுக்குக் காரணம் வடமொழி மகாபாரத்தின் அநுசாசந பர்வதம் எனவும் மறைமலையடிகள் குறிப்பிடுகிறார். (மறைமலையடிகள், திருவாசக விரிவுரை ப.276)*

*ஏழாம்திருமுறையில் அமையும் கட்டுரை கூடுதலான செய்தி ஒன்றைத் தருகிறது. முப்புர அரக்கர்களை அழிக்கத் திருமாலும்ம தேவர்களும் வேள்வியியற்றிப் பூதங்களை உண்டாக்கி முயன்றதாகவும், அப்பூதங்கள் அவர்களை அணுக மாட்டாதனவாய் அழிந்து போனதாகவும், அணுக இயலாமைக்குக் காரணம் திரிபுரத்தவர்கள் சிவநெறி மாறாதவர்களாய் இருப்பது தான் என்பதை உணர்ந்து கூறிய திருமால் ஆதிபுத்தன் என ஒருவனைப் படைத்து அவனோடு நாரதரையும் அனுப்பி அவர்களைச் சிவநெறியினின்றும் நீங்கச் செய்து பின் சிவபெருமானிடம் வேண்ட அவரழித்ததாகவும் கூறுப்படுகிறது. மேலும் ஒரு புன்சிரிப்பில் முப்புரத்தையும் சாம்பலாக்கினார் என்றும் குறிப்பிடப்படுகிறது.(சபேசன்.வி. புராண வரலாற்றுக் குறிப்புக்கள், ஏழாந்திருமுறை, ப.140) இவ்வாறான தொன்மக் கதை வேறுபாடுகளுக்குத் தொன்மத்தின் நெகிழ்வுத்தன்மை காரணமாகிறது எனலாம்.*

**தொன்மத் தொடர்களின் எண்ணிக்கை**

*திரிபுரம் எரித்த தொன்மம் ஏழாந்திருமுறையில் 73 இடங்களில் சுந்தரரால் குறிப்பிடப்படுகிறது.*

**சுந்தரர் தேவாரத்தில் தொன்மம்**

*தாரகாக்கன் கமலாக்கன், வித்தியுன்மாலி என்னும் தலைவர் உட்படத் திரிபுரத்தில் இருந்தவர் அனைவரும் புத்தன் போதனையால் சிவனடியை கைவிடவும், சுதன்மன், சுசியன், சுபுத்தி (சுமாலி) என்னும் மூவர் மட்டும் முன்போலவே சிவநெறியில் மாறாது நின்று சிவபிரானிடத்து அன்பு பூண்டு ஒழுகினமையால், சிவபெருமான் அவர்களை மட்டும் அழியாது காத்து திருவருள் செய்தார் என்பதனை,*

***மூவெயில் செற்ற ஞான்றுயிந்த மூவரில்***
***இருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல்***
***காவரொளரென் றேவிய பின்னை***
***யொருவன் நீகரி காடரங்காக***
***மானை நோக்கியோர் மாநடம் மகிழ***
***மணிமு ழாமுழக்வருள் செய்த***
***தேவ தேவநின் றிருவடி யடைந்தேன்***
***செழும்பொழிற் றிருப்புன்கூ ருளானே (7:55:8)***

*என்று சுந்தரர் குறிப்பிடுகிறார்.*

*சிவபிரான் திருக்கோயில்களில் துவாரபாலகர்களாய் நிற்பவர். இவருள் இருவரே என்பது இத்திருப்பாடலால் விளங்கும். மற்றொருவன் இறையவர் நடனங்கண்டு மகிழ்ந்து முழவை இயக்குகிறான்.*

**தத்துவம்**

*சிவன் தொடர்பான தொன்மங்கள் பலவற்றிருக்கும் திருமூலர் தரும் தத்துவ விளக்கம் கவனிக்கத்தக்கது ஆகும்.*

***அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்***
***முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்***
***முப்புர மாவது மும்மல காரியம்***
***அப்புரம் எய்தமை யாரறி வாரே (10:343)***

*என்பது திருமந்திரம். அதாவது உயிர்களை வருத்தும் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்கள் இறைவனது அருள் நெருப்பால் எரிந்து போகும். இதனைக் குறியீட்டு நோக்கில் உணர்த்துவதாக முப்புரம் சுட்டப்படுகிறது. அதாவது ஆன்மபந்தம் சிவஞானம் என்ற தீயால் எரிக்கப்படுகிறது. ஆன்மாக்கள் சிவத்தொடர்பு பெற்றுச் சிறக்கின்றன என்ற தத்துவப் பொருளைத் திரிபுரம் எரித்த தொன்மத்திற்கு விளக்கமாகத் திருமூலர் தருகிறார் என்பர்.(சு. சந்திரா, தொன்மநோக்கில் அட்டவீரட்டம், ஞானசம்பந்தம் ப.88) முப்புரத்தையும் பெருமான் எரித்தமை மும்மலங்களை இறையருள் நீக்குவதனைக் குறிக்கும். திருமூலரின் இக்கருத்தை சிவபிரான் முப்புரங்களை எரித்தான் என்பது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களாகிய ஸ்தூல, சூக்கம, காரணம் என்னும் மூன்று உடல்களை அழித்தான் எனப் பொருள்படும் எனத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகிறார்.(ராஜமாணிக்கனார். ம., சைவசமய வளர்ச்சி ப.93)*

*சத்துவம், ரஜஸ், தமஸ், ஆகிய முக்குணங்களும் மூன்று அரக்கர்கள் எனப்படுகிறார்கள். அவற்றின் ஆதிக்கத்தால் பிரபஞ்சம் அனைத்தும் உரு எடுக்கின்றன. முப்பாழ் ஆகிய இம்மூன்றையும் ஒடுக்கிவிட்டால் பிரபஞ்சத்துக்கு அப்பால் உள்ள பெருநிலம் ஜீவனுக்குச் சொந்தமாகிறது. அதாவது ஜீவன் முக்தியடைகிறான். அதற்குக் கடவுளைச் சார்ந்திருத்தல் வேண்டும். அப்படிச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்வது பெரிய ஆயத்தம். அவருடைய அருளால் அம்மூன்று புரங்களும் அழிக்கப்படுகின்றன. சிவசாயுஜ்யம் கிட்டுகிறது என்பது ஒரு தத்துவ விளக்கமாகும்.*

*முப்புரத் தலைவராம் மூவரும் முக்குணங்களின் உருவகம் எனவும், இந்த மும்மல ஆட்சி வலுப்பெறின் விண்ணவர் மண்ணவர் அனைவரையும் அது வருத்துமெனவும், அவற்றினின்றும் வீடு பெற நாம் இறைவனைச் சார்ந்திருத்தல் வேண்டுமெனவும், சார்ந்த மூவர் தண்ணருள் பெற்றமை நமக்கு வழிகாட்டுதல் எனவும், மும்மல அழிப்பு முதல்வனாலேயே கூடும் என்பதும், இத்தொன்மம் வெளிப்படுத்தும் தத்துவமாகும்.*